மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.135/2016

வாக்குமூலம். வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜாமணி | ஜாதி | |
| க/பெ. | சண்முகசுந்தரம் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 60 /2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 03-03-2023 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)நான் படிக்கவில்லை. நான் ஆங்கிலத்தில் கையெழுத்துப்போடுவேன். ஆங்கிலத்தில் நான் முழுதாக பெயர் எழுதுவேனா அல்லது கையெழுத்துப் போடுவேனா என்றால் கையெழுத்துப் போல் கிருக்கிவிடுவேன்.**

**2)1ம் பிரதிவாதி எனக்கு உறவினரா என்றால் இல்லை. என் கணவருக்குத் தெரிந்தவர். 1ம் பிரதிவாதிக்கும் எனது கணவருக்கும் எத்தனை வருடம் பழக்க வழக்கம் என்றால் வழக்கிற்கு முன்னால் 4,5 மாதங்கள் தான் இருக்கும்.**

**3) எந்த வகையில் என் கணவருக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பழக்கம் என்றால் எந்த வகை பழக்கம் என எனக்குத் தெரியாது. என் கணவர் தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். மனநிலை சரியில்லாமல் இருக்கிறார். 1ம் பிரதிவாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.**

**4) 2ம் பிரதிவாதியை எனக்குத் தெரியாது. 2ம் பிரதிவாதி எந்த முகவரியில் இருக்கிறார் அவர் என்ன தொழில் செய்கிறார் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியை நான் எந்தக் காலத்திலும் பார்த்தது இல்லையென்றால் சரிதான்.**

**5)என்னுடைய பிராதில் 2ம் பத்தியில் 1ம் பிரதிவாதி என்னுடைய தூரத்து உறவினர் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லவில்லை. அந்த அடிப்படையில் 1ம் பிரதிவாதியை எனக்குத் தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. 2ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை படித்துப் பார்த்து தான் நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்தேனா என்றால் 2ம்**

பிரதிவாதியின் எதிர்வழக்குரையை படித்துப் பார்த்தது இல்லை.

6)நான் எனது வழக்கறிரிடம் 2ம் பிரதிவாதி என்ன கட்சி செய்துள்ளார் எனத் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலம் 3வது பத்தியில் 1ம் பிரதிவாதி துாரத்து உறவினர் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியைப் பற்றி நான் எப்படித் தெரிந்து கொண்டேன் என்றால் 1ம் பிரதிவாதியை எனது கணவர் வீட்டிற்கு அழைத்து வந்து 1ம் பிரதிவாதி கடன் பட்டுள்ளார் என்று சொல்லி அழுதார் நான் 1ம் பிரதிவாதிக்கு உணவு பரிமாறினேன். அப்போது 1ம் பிரதிவாதியைப் பற்றி நான் விசாரித்தேனா என்றால் நான் விசாரிக்கவில்லை.

7) நான் நிரூபண வாக்குமூலத்தில் 3வது பத்தியில் 1ம் பிரதிவாதி புதுக்கோட்டையில் மேற்கண்ட அவரது முகவரியில் அசோக் அக்ரே ஏஜெண்சி என்ற நிறுவணம் நடத்தி வந்துள்ளார் என்று நான் சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை. நான் தேடி கண்டுபிடித்தேன்.

8) 1ம் பிரதிவாதி அக்ரோ ஏஜெண்சி என என்ன தொழில் செய்து வந்தார் என்றால் அந்த விபரம் எனக்குத் தெரியாது. நான் நிரூபண வாக்குமூலத்திலும் பிராதிலும் அ க்ரோ ஏஜெண்சி நடத்திவந்துள்ளதாகவும் அதில் உரம், பூச்சி, மருந்து மற்றும் நெல் விதைகள் கொல் முதல் செய்து விற்பனை செய்து வந்துள்ளதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சொல்லவில்லை அங்கு விசாரித்த போது சொன்னார்கள்.

9) நான் என்னுடைய பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியிடம் இருந்து நெல் விதைகள் மற்றும் உரம் மற்றும் பூச்சி மருந்து ஆகியவைகளை மொத்தமாக கொள்முதல் செய்து வியாபாரம் செய்து வந்துள்ளார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

10)1ம் பிரதிவாதியை எனக்கு அறிமுகப்படுத்தியது எனது கணவர் தான் என்றால் சரிதான். அவ்வாறு அறிமுகப்படுத்தும் போது 1ம் பிரதிவாதியைப் பார்த்து எனக்கு பரிதாபமாக இருந்ததா என்றால் ஆமாம். அதன் பிறகு 1ம் பிரதிவாதியின் குடும்பத்தை சென்று பார்த்தேனா என்றால் இல்லை.

11)தாவா சொத்தை நான் 19-11-2007 ல் உசிலப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சிதம்பரம் குமாரர் பனையப்பன் என்பவரிடமிருந்து பணம் கொடுத்து கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி கிரையப்பத்திரத்தின் யாரிடம்

இருக்கிறது என்றால் என கணவர் பரிதாபப்பட்டு அசோக்கிடம் மூன்று மாதத்திற்கு மூல ஆவணங்கள் கொடுத்து விட்டு திரும்ப வாங்கிக் கொள்ளலாம் என்று சொன்னதால் நான் கொடுத்து விட்டேன்.

12) என்னிடம் காட்டப்படுவது தான் நான் கிரையம் வாங்கிய பத்திமா என்றால் சரிதான். மேற்படி கிரையப்பத்திரம் பி.வா.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.1. ஆவணத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் ஆங்கிலத்தில் கையெழுத்துப் போட்டுள்ளேன் என்றால் சரிதான்.

13) மேற்படி பி.வா.சா.ஆ.1. கிரைய ஆவணம் எப்படி 2ம் பிரதிவாதி கைக்கு கிடைத்தது என்றால் எனது கணவர் 1ம் பிரதிவாதிக்கு கொடுக்க தான் வாங்கிச் சென்றார். 2ம் பிரதிவாதி வசம் எப்படிச் சென்றது என்று எனக்குத் தெரியாது. பி.வா.சாஆ.1. கிரைய ஆவணத்தின் படி அதில் கண்ட சொத்து எனக்கு சொந்தமாக எனது அனுபவத்தில் இருந்து வந்தது என்றால் சரிதான். இப்போதும் நான் தான் அனுபவம் செய்கிறேன்.

14) தற்போது 27.07.2015 ஆம் தேதிக்குப்பிறகு நான் அனுபவம் செய்து வருவதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் வா.சா.1 2ம் பிரதிவாதிக்கு 27.07.2015 ல் நான் கிரையம் கொடுத்தாக சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் கிரையமே செய்யவில்லை. அசோக்கிற்கு எழுதிக் கொடுத்தது. வா.சா.1. சான்றிட்ட நகலை என்ன காரணத்திற்காக நகல் பெற்றேன் யார் நகல் பெற்றுக் கொடுத்தது என்றால் எங்கள் ஊரில் மனு எழுதிப்போடுபவர் வழிகாட்டுதலில் எடுத்தேன். எந்த அலுவலகத்திலிருந்து வா.சா.1. ஆவணம் பெற்றேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

15) வா.சா.1.றில் யார் யாருக்கு எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது மகள் வழக்கறிஞராக இருக்கிறார். எனது மகளிடம் வா.சா.1. பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் நான் கிரையம் கொடுத்தது போல் இருப்பதாகச் சொன்னார். நான் கிரையம் கொடுக்கவில்லை. யாருக்கு கிரையம் கொடுத்தாக இருக்கிறது என்றால் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தாக இருக்கிறது.

16) நான் வா.சா.1. நகல் எப்போது எடுத்தேன் என்றால் வழக்குப் போடுவதற்கு ஒரு வருடம் முன்பே எடுத்தேன். என்னிடம் காட்டப்படுவது 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த பத்திரமா என்றால் இந்த மாதிரி தான் என் கணவரும் அசோக்கும் வாங்கிச் சென்றார்கள். நான் அவருக்கு கிரையம்கொடுக்கவே

இல்லை. அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். மேற்படி கையெழுத்துக்கள் மட்டும் பி.வா.சா. 2 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.

17)வா.சா.1. னின் அசல் தான் என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணம் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. பி.வா. ஆ 2 வரிசையில் 9 கையெழுத்துக்கள் போட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தின் பின்பக்கத்தில் உள்ள புகைப்படம் சார்பதிவாளர் அலுவலகத்தில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் நான் கைரேகையும் வைத்துள்ளேன். அந்தப் புகைப்படமும் கை ரேகையும் பி.வா.சா.ஆ. 3 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.

18) மேற்படி கிரையஆவணத்தில் எனது கணவரும் முதல் சாட்சியாக போட்டார் என்றால் சாட்சி என்று போடவில்லை. நான் கையெழுத்துப் போட்டதற்கும் அவரும் கீழே கையெழுத்துப் போட்டார். என்னை போட்டோ எடுத்தப் பக்கத்திலும் அவரும் ஒரு கையெழுத்துப் போட்டுள்ளார் என்றால் சரிதான். நான் அந்தஅலுவலகத்திற்கு 2 ம் பிரதிவாதியும் வந்திருந்தார் என்றால் நான் பார்க்கவில்லை. ஆனால் மேற்படி கிரைய ஆவணத்தில் 2 ம் பிரதிவாதியும் கையெழுத்துப் போட்டுள்ளார் என்றால் அங்கே கையெழுத்து இருக்கிறது. என் கையெழுத்து மட்டும் தான் எனக்குத் தெரியும். எனது கையெழுத்துக்கு நேராக ஜெயராமையா என யார் கையெழுத்துப் போட்டுள்ளார் என்றால் கையெழுத்துப் போட்டுள்ளார்கள் யார் போட்டது என எனக்குத் தெரியாது. கையெழுத்துப் போட்டவரும் என்னுடன் வந்து புகைப்படம் எடுத்தார் என்றால் அதை நான் பார்க்கவில்லை. என்னை போட்டோ எடுத்தது மட்டும் தான் எனக்குத் தெரியும்.

19) பி.வா.சா.ஆ.2 வரிசை கையெழுத்துக்கள் உள்ள கிரையப்பத்திரத்தை 2 ம் பிரதிவாதிக்கு 27.07.2015 ஆம் தேதியில் சரியான பிரதிபிரயோசனத்திற்கு எழுதிக் கொடுத்து விட்டு சுவாதீனத்தையும் 2 ம் பிரதிவாதி வசம் ஒப்படைத்து விட்டு தற்போது அந்த கிரையத்தை மோசடி செய்வதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

20) 1 ம் பிரதிவாதி எங்கு இருக்கிறார் என்றால் எனக்குத் தெரியவில்லை. நான் போன் செய்தாலும் தொடர்பு கிடைக்கவில்லை. தாவா சொத்தை எனது குடும்ப செலவிற்காக 2 ம் பிரதிவாதிக்கு விற்று விட்டு மேற்படி கிரையத்தை மோசடி செய்வதற்காக பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

என்னுடைய பிராது படி 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியை கடனுக்காக மிரட்டி வந்ததால் கிரையம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்று சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி எனக்குத் தெரியாமல் என்னிடம் கையெழுத்துப் பெற்றுக் கொண்டு என்னை சந்தித்து கிரைய ஆவணம் தயார் செய்து எனக்குத் தெரியாமல் பதிவு செய்து விட்டார் என்று கட்சி செய்வது பொய்யான து என்றால் சரியல்ல. பதிவு செய்த சார்பதிவாளர் பொய்யாக பதிவு செய்து விட்டார் என்று அவருக்கு எதிராக பரிகாரம் கோரி அவரை தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லையென்றால் சரிதான்.

21)1ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியும் தொழில் ரீதியான ஒருவருக்கொருவர் அறிமுகம் ஆனவர்கள் என்பதால் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் பரிந்துரையின் பெயரில் தாவா சொத்தை என்னிடமிருந்து சரியான பிரதிப்பிரயோசனத்திற்கு கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. என்னுடைய பிராதில் 4வது பத்தியில் அடமானப்பத்திரம் என்று பி.வா.சா. 2 வரிசை கையெழுத்துக்கள் உள்ள பத்திரத்தை நினைத்து இருந்ததாக நான் சொல்லியிருப்பதில் நான் அடமானக்கடன் வாங்கினேனா என்றால் 1ம் பிரதிவாதி கடன் வாங்க வேண்டும் என்பதற்காக என்னை அழைத்துச் சென்று அவருக்காக அடமானப்பத்திரம் என்று மூன்று மாதத்தில் திருப்பிக் கொடுப்பதாகச் சொல்லி மேற்சொன்ன பி.வா.சா 2 வரிசை கையெழுத்து உள்ள பத்திரத்தை எழுதிக் கொடுத்தேன். என்னுடைய மகள் வழக்கறிஞர் என்பதால் சாதாரணமாக குடும்ப விஷயங்களை என் மகள் வழக்கறிஞர் உட்பட மற்ற குடும்பத்தாரிடம் நான் பேசுவேன் என்றால் சரிதான்.

22) என்னுடைய பிராதில் 5வது பத்தியில் 2ம் பிரதிவாதியை சந்தித்து தாவா சொத்தை என்னிடம் ஒப்படைத்து விடுமாறு சொல்லியிருக்கிறேன் என்றால் நான் சொல்லவே இல்லை. நான் 2ம்பிரதிவாதியை பார்த்ததே இல்லை. 2ம் பிரதிவாதியின் அலைபேசி எண் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. பிராதில் 2ம் பிரதிவாதியை பலமுறை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பத்திரத்தை ரத்து செய்து விடுவதாக நான் பிராதில் சொல்லியிருக்கிறேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. எனக்கு 2ம் பிரதிவாதியின் தொலைபேசி எண் தெரியாது என்றாலும் 2ம் பிரதிவாதியின் தொலைபேசியில் தொடர்பு கொண்டதாக சொல்லவில்லையென்றால் சரிதான். மேற்கண்டவாறு 2ம் பிரதிவாதியை சந்தித்ததாகவும் தொலைபேசியில் தொடர்பு

கொண்டதாகவும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லையென்றால் சரிதான்.

23) நான் 2 ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக் கொடுத்து விட்டு மோசடியாக அதனை ரத்து செய்ய வேண்டும் என்று பொய்யாக வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி எந்த முகவரியில் இருக்கிறார் என எனக்குத் தெரியாது. 2 ம் பிரதிவாதி வியாபார ரீதியாக தெலுங்கானா மாநிலத்தில் இருக்கிறார் என்றாலுகூம் நான் போட்ட பிராது தவறானதுஎன எனக்கே தெரிந்து 2 ம் பிரதிவாதிக்கு கஷ்ட நஷ்டம் கொடுப்பதற்காக நான் நஷ்டயீடு இரண்டாம் பிரதிவாதிக்கு செலுத்தக் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. தாவா சொத்து நாளது தேதிவரை 2 ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. நான் தான் அனுபவித்து வருகிறேன்.

மறு விசாரணை

இல்லை.